**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

CC.No.64-2020 **L.W.6** P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | கோவிந்தராசு | Caste | |
| Father/Husband Name | முத்துசாமி | Calling | |
| Village | எழுத்தூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 34 |
| District | கடலூர் | Time | 12.40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 03.01.2025 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

**எதிரி ஆஜர், வழகக்கறிஞர் ஆஜர், அரசு வழக்கறிஞர் ஆஜர்,**

***குவி.மு.ச.311, சி.எம்.பி.எண் 1554–2024, நாள் 11–06–2024ன் படி மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை***

நான் இவ்வழக்கில் இதற்கு முன்பு 26–09–2023 அன்று சாட்சியம் அளித்துள்ளேன். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் ? சரிதான். வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்டேன். வழக்கு சம்பவத்தில் அடிப்பட்ட நபரை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்குசென்று பார்த்தீர்களா என்றால் ? அவர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவ மனைக்கு அழைத்துச்சென்றார்கள். பாதிக்கப்பட்டவருக்கு வலது கையில் காயம் காணப்பட்டது. அவரை திருச்சிக்கு அழைத்துச்சென்றப்பிறகு நான் நேரடியாக வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் ? சா–தான். வழக்கில் பாதிக்கப்பட்டவர் இறந்துவிட்டார் என எப்போது தெரிந்துகொண்டீர்கள் என்றால் ? இரண்டு நாட்கள் கழித்து தெரிந்துகொண்டேன். போலிஸார் என்னை சம்பவத்தன்றே விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். இவ்வழக்கில் பிரேதவிசாணை அறிக்கை எழுதி அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ? வாங்கினார்கள்.

**TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

**CC.No.64-2020** **L.W.3** **P.W.3**

| Name | மருதமுத்து | Caste | |
|---|---|---|---|
| Father/Husband Name | முருகேசன் | Calling | |
| Village | எழுத்தூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 27 |
| District | கடலூர் | Time | 12.35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 03.01.2025 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

**எதிரி ஆஜர், வழகக்கறிஞர் ஆஜர், அரசு வழக்கறிஞர் ஆஜர்,**

***குவி.மு.ச.311, சி.எம்.பி.எண் 1554–2024, நாள் 11–06–2024ன் படி மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை***

நான் இவ்வழக்கில் இதற்கு முன்பு 05–09–2023 அன்று சாட்சியம் அளித்துள்ளேன். நான் ஐந்து ஆண்டுகாலமாக ஆட்டோ ஓட்டி வருகிறேன். வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கும் நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் ? சுமார் அரை கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் டமார் என சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன் என்று சொன்னால் ? சா– ரிதான். வழக்கில் அடிப்பட்டவர் மேற்கிலிருந்து கிழக்குநோக்கி சாலையில் செல்லும்போதுதான் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால் ? சரிதான். சம்பவ இடம் சென்று நான் பார்த்தபோது என்னுடன் சக்திவேலும் வந்தார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும்போது இந்த விபத்தை ஏற்படுத்திய கார், அதன் ஓட்டுனர் அங்கிருந்தாரா என்றால் ? இருந்தார். எனக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியும். போலிஸார் என்னை ஒரு முறை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன்.

வழக்கு சம்பவத்தில் அடிப்பட்ட நபருக்கு கையில் ஏற்பட்ட காயத்தை பற்றி போலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளீர்களா என்றால் **?** வாக்குமூலம் கொடுத்துள்ளேன்**.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.64-2020** **L.W.2** **P.W.2**

| Name | பெரியசாமி | Caste | |
|---|---|---|---|
| Father/Husband Name | நாராயணசாமி | Calling | |
| Village | எழுத்தூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 48 |
| District | கடலூர் | Time | 12.30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 03.01.2025 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

**எதிரி ஆஜர், வழகக்கறிஞர் ஆஜர், அரசு வழக்கறிஞர் ஆஜர்,**

***குவி.மு.ச.311, சி.எம்.பி.எண் 1554–2024, நாள் 11–06–2024ன் படி மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை***

**1.** நான் இவ்வழக்கில் இதற்கு முன்பு 05–09–2023 அன்று சாட்சியம் அளித்துள்ளேன். வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கும் நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ? சுமார் அரை கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் டமார் என சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன் என்று சொன்னால் ? சரிதான். இவ்வழக்கில் அடிப்பட்ட நபர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்கின்றபோதுதான் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால் ? சரிதான். நான் சம்பவ இடம் சென்றுபார்க்கும்போது சம்பவ இடத்தில் வாகனமோ அதன் ஓட்டுனரோ அங்கிருந்ததா என்றால் ? இல்லை. நான் சம்பவ இடம் சென்று பார்க்கும்போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் ? நான் மட்டும்தான் இருந்தேன். ஆஜர் எதிரியை நீதிமன்றத்தில் பார்ப்பதற்கு முன்பாக யார் என்று தெரியாது என்று சொன்னால் ? சரிதான்.

**2.** போலிஸார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ? ஒரு முறைதான்

விசாரித்து கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். போலிஸார் என்னிடம் நான் சொன்ன ஒரு சில சங்கதிகளை எழுதிக்கொண்டார்கள் மேலும் ஒரு சில சங்கதிகளை போலிஸாரே எழுதிக்கொண்டார்கள் அதில் தான் நான் கையொப்பம் செய்தேன்.

**TYPED TO MYDICTATION OPENCOURT INPRESENCE OF ACCUSED READOVER TO THE DEPONENT AND ADMITTED BY HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI